### அரசின் திட்டங்களை சரியாகப் பயன்படுத்தி - தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள்

# கல்வி, அறிவாற்றலில் சிறந்தும் தனித் திறமை கொண்டவர்களாகவும் வளர வேண்டும்!

## கொளத்தூர் 'அனிதா அச்சீவர்ஸ் அகாடமி' நிகழ்ச்சியில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

சென்னை, செப்.14-

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.09.2023) கொளத்தூர், வீனஸ் எவர்வின் பள்ளி மைதானத்தில் நடைபெற்ற அனிதா அச்சீவர்ஸ் அகாடமி மாணவ, மாணவியர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில், "தமிழ்நாட்டைச் சேர்ந்த மாண வர்கள் கல்வியில், அறிவாற்றலில் சிறந்தவர் களாகவும், தனித்திறமை கொண்டவர்களாகவும் வளரவேண்டும்" என்று குறிப்பிட்டார்.**

முதல்வர் அவர்களின் உரை வருமாறு:-

அரசினுடைய பணிகளை, தலைமைச் செயலகத்தில் இருக்கக்கூடிய பணிகளை எல்லாம் முடித்துக்கொண்டு, சற்று ஓய்வு கிடைத்தாலும், அந்த ஓய்வைப் பயன்படுத்திக் கொண்டு கொளத்தூருக்கு வருவதை என்னுடைய வழக்கமாக வைத்திருக்கிறேன்.

கடந்த வாரம் கொளத்தூருக்கு வந்த போது, இந்த அனிதா அகாடமி அச்சீவர்ஸ் அகாடமிக்கு வந்து உங்களை எல்லாம் சந்திக்க வேண்டும் என்று நினைத்தேன். ஆனால், கடுமையான மழை வந்த காரணத்தினால், அந்த நிகழ்ச்சியை ரத்து செய்து, ஒத்தி வைக்கவேண்டிய சூழ்நிலைக்கு ஆளாகி நான் வரமுடியாமல் போய்விட்டது.

**ஒரு வாரத்தில் இருமுறை கொளத்தூர் தொகுதிக்கு வரும் வாய்ப்பு!**

ஆனால் அதையும் ஒரு வேளை நல்ல காரியமாக நான் நினைக்கிறேன். அதனால் தான் உடனடியாக இன்னொருமுறையும் இரண்டாவது முறையாக இந்த ஒரு வாரத்திற்குள் கொளத்தூருக்கு வரக்கூடிய வாய்ப்பு எனக்கு கிடைத்திருக்கிறது என்றால், அது உள்ளபடியே எனக்கு மகிழ்ச்சிதான்.

என்னைத் தொடர்ச்சியாக, சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுத்த தொகுதி இந்த கொளத்தூர் தொகுதி என்பது உங்களுக்கெல்லாம் நன்றாக தெரியும். இந்த கொளத்தூர் தொகுதிக்கு எத்தனை முறை வந்தாலும் எனக்குத் திகட்டாது. வந்துகொண்டே இருக்கவேண்டும் போலத்தான் எனக்குத் தோன்றிக் கொண்டே இருக்கும்.

**அனைத்து நிகழ்ச்சிகளையும் சிறப்பாக நடத்தும் "செயல்பாபு"!**

அதுவும் குறிப்பாக, இந்தத் தொகுதிக்கு வரக்கூடிய நேரத்தில் எனக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது என்றால், அந்த மகிழ்ச்சியை இன்னும் கூடுதலாக்க, நம்முடைய மாணவச் செல்வங்களுக்கு உதவுகின்ற அந்த வாய்ப்பு கிடைக்கின்றபோது அது இன்னும் கூடுதலாக்கிக் கொண்டிருக்கிறது. நம்முடைய அறநிலையத்துறை அமைச்சர், மாவட்டச் செயலாளர், நான் எப்போதும் "செயல்பாபு", "செயல்பாபு" என்றுதான் அவரை அழைப்பதுண்டு. அவர் ஏதோ புதிதாக இந்த நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கிறார் என்று சொல்லமாட்டேன். அனைத்து நிகழ்ச்சிகளையும் சிறப்பாக ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார். அப்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கக்கூடிய அந்த நிகழ்ச்சியில் நான் கலந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பெருமைப்படுகிறேன்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.9.2023) கொளத்தூர், வீனஸ் எவர்வின் பள்ளி மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் TALLY பயிற்சி முடித்த மாணவ, மாணவியர்களுக்கு இலவச மடிக்கணினிகளையும், தையல் பயிற்சி முடித்த பெண்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் மோட்டார் பொருத்திய இலவச தையல் இயந்திரங்களையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, ஆர். கிரிராஜன், துணை மேயர் மு. மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியின் தலைமை நிர்வாகிகள் இரா. நரேந்திரன், திருமதி. ஹெலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த அனிதா அச்சீவர்ஸ் அகாடமி தொடங்கப்பட்டதன் நோக்கத்தை எப்போதெல்லாம் உங்களைச் சந்திக்க வருகிறேனோ, எப்போதெல்லாம் இந்த அகாடமியினுடைய சார்பில் நடக்கக்கூடிய இந்த நிகழ்ச்சியில் நான் கலந்து கொள்ளும்பொழுது அப்போதெல்லாம் நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். நான் எத்தனையோ முறை அதை சுட்டிக்காட்டிப் பேசி இருக்கிறேன்.

**இளைஞர்களுக்குப் பயனுள்ளதாக விளங்கும் அனிதா அச்சீவர்ஸ் அகாடமி!**

கொளத்தூர் தொகுதியில் இருக்கின்ற இளைஞர்களும், மாணவர்களும் தங்களுடைய திறன்களை மேலும் வளப்படுத்திக் கொண்டு, வேலைவாய்ப்பைப் பெற்றிட வேண்டும் என்கின்ற அந்த நோக்கத்தோடு தான், இந்த அகாடமியை, அனிதா அச்சீவர்ஸ் அகாடமி என்கிற பெயரில், நாம் தொடங்கினோம்.

நான் ஒவ்வொரு முறையும் இங்கே வந்து, இந்த நிகழ்ச்சியில் எல்லாம் கலந்து கொண்டு, உங்களை எல்லாம் பார்த்து, இந்த உதவிகளை வழங்குகிறபோது, இங்கே படித்ததால் உங்களுக்குக் கிடைத்திருக்கின்ற வாய்ப்புகளைப் பற்றி சொல்கிற போது, மறைந்த நம்முடைய அருமைத் தங்கை அனிதாவைதான் ஒவ்வொரு முறையும் நான் நினைத்துப் பார்ப்பதுண்டு.

நீட் என்ற கொடுமையான தேர்வுக்கு என்றைக்கு முற்றுப்புள்ளி வைக்கின்றோமோ, அன்றைக்குதான் நாம் அனிதாவுக்கு உண்மையான அஞ்சலி செலுத்தக் கூடிய நாளாக அது அமைந்திட முடியும்.

நீட்டுக்கு முற்றுப்புள்ளி வைத்தே ஆக வேண்டும் என்ற உறுதியை அனிதா முதல் சமீபத்தில் மறைவெய்திய ஜெகதீஸ்வரன் வரைக்கும் அந்த மாணவச் செல்வங்கள் நமக்கு உணர்த்திக் கொண்டே இருக்கிறார்கள்.

நம்முடைய அனிதா பெயரில் அச்சீவர்ஸ் அகாடமி தொடங்குவதிலிருந்து, டேலி படிப்பைப் பொறுத்தவரையில், இதுவரை 9 'பேட்ச்' முடித்து, 743 மாணவிகள் இலவச லேப்டாப் மற்றும் சான்றிதழ் வாங்கியிருக்கிறார்கள். ஆண்களில், இதுவரை 5 batch முடித்து, 381 மாணவர்கள் இலவச லேப்டாப் மற்றும் சான்றிதழ் வாங்கியிருக்கிறார்கள். இன்றைக்கு, மேலும் 136 மாணவ மாணவிகளுக்கு இலவச லேப்டாப் வழங்கப்பட இருக்கிறது.

தையல் பயிற்சியைப் பொறுத்தவரை, இதுவரை 5 'பேட்ச்'-ல் 1,467 பெண்கள் இலவச பயிற்சி முடித்து, சான்றிதழ் மற்றும் மோட்டார் பொருத்திய இலவச தையல் இயந்திரம் பெற்றிருக்கிறார்கள். இன்றைக்கு 6ஆவது batchல் 359 பெண்களுக்கு சான்றிதழ் மற்றும் மோட்டார் பொருத்திய இலவச தையல் இயந்திரம் வழங்கப்பட இருக்கிறது.

**தையல் பயிற்சி பெறுவோருக்கு நல்ல வேலைவாய்ப்பு கிடைக்கிறது!**

தற்போது, 491 மாணவ-மாணவிகள் டேலி மற்றும் தையல் பயிற்சியைப் பெற்று வருகிறார்கள். இந்தப் பயிற்சிகளை முடித்தவர்களுக்கு நல்ல வேலைவாய்ப்புகள் கிடைத்துக் கொண்டு வருகிறது.

பட்டப்படிப்புடன் சேர்ந்து இதுபோன்ற தனித்திறமைகள் இருந்தால்தான் வளர முடியும். அந்த வாய்ப்பை நாம் உருவாக்கிக் கொடுத்திருக்கிறோம். தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் கல்வியில், அறிவாற்றலில் சிறந்தவர்களாகவும், தனித்திறமை கொண்டவர்களாகவும் வளரவேண்டும். அதற்காகத்தான் "நான் முதல்வன்" என்ற திட்டத்தைத் தொடங்கி வைத்தேன். இது என்னுடைய கனவுத் திட்டம். ஆண்டுக்கு, பத்து லட்சம் மாணவர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கத் திட்டமிட்டோம். எவ்வளவு? ஆண்டிற்கு 10 இலட்சம் பேருக்கு திட்ட மிட்டோம். ஆனால் கடந்த ஆண்டு 13 லட்சம் மாணவர்கள் இதில் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். இவர்களுக்குத் தகுதிக்கு ஏற்ற வேலை வாய்ப்புகள் கிடைத்துக் கொண்டு வருகிறது.

**அனைத்துத் தரப்பினர் நலனையும், பாதுகாத்து வருகின்ற அரசுதான் நம்முடைய அரசு, ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தது முதல், சமூக மேம்பாட்டிற்காக சமூக நீதியின் அடிப்படையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். அந்தத் திட்டங்கள் எல்லாம் மக்கள் மத்தியில் மிகப் பெரிய செல்வாக்கு வந்து கொண்டிருக்கிறது.**

குறிப்பாக, கல்லூரி மாணவ, மாணவியரின் வேலைவாய்ப்புக்கான தனித்திறனை மேம்படுத்தும் 'நான் முதல்வன்' திட்டம், இங்கே வாழ்த்துரை வழங்கிய சகோதரி அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார். ஏழை, எளிய பெண்களின் மாதாந்திரச் செலவில் குறிப்பிட்ட தொகையை மிச்சப்படுத்தி வாழ்வாதாரத்தை வலுப்படுத்தி வரும் விடியல் பயணத்திட்டம், பெண்கள் உயர்கல்விக்கு செல்வதை ஊக்கப்படுத்தும் வகையில் புதுமைப்பெண் திட்டம், பள்ளிகளுக்கு வரக்கூடிய குழந்தைச் செல்வங்கள் பட்டினியுடன் வரும் இந்த செல்வங்களுடைய பசியை ஆற்றி வரக்கூடிய காலை உணவுத்திட்டம், ஏழை, எளிய குடும்பத் தலைவிகளின் பொருளாதாரத் தற்சார்பை உறுதிப்படுத்தக் கூடிய கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் - இன்னும் மூன்று நாட்களுக்குள் வருகின்ற செப்டம்பர் 15ஆம் தேதி அண்ணா பிறந்த நாளன்று அவர் பிறந்த காஞ்சிபுரத்தில் நான் தொடங்கி வைக்க இருக்கிறேன். இப்படி நம்முடைய திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வரக்கூடிய திட்டங்களை எல்லாம் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

இந்தத் திட்டங்களுக்குரிய நிதி ஒதுக்கீடு அதாவது செலவை எல்லாம் கூட நாங்கள் செலவினங்களாக பார்க்கவில்லை. எதிர்காலத் தலைமுறைகளின் வளர்ச்சிக்கான முதலீடுகளாக நாங்கள் பார்க்கின்றோம்!

அந்த வகையில், அந்தத் திட்டம் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் தொடங்கப்பட இருக்கிறது. நம்மையெல்லாம் ஆளாக்கிய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் பெயரால் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை நாம் தொடங்கப் போகின்றோம். இன்னும் சொல்லப்போனால், இந்தத் திட்டத்தின் மூலமாக உதவித்தொகை கொடுக்கவில்லை; உரிமையைக் கொடுக்கின்றோம். அதுதான் முக்கியம். அதனால்தான் கலைஞர் அவர்கள் மகளிர்க்கு சொத்தில் சம உரிமை அளித்து அவர்களுடைய சுய மரியாதையைக் காப்பாற்றி இருக்கிறார்.

இந்த மகளிர் உரிமைத் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும், இந்தத் திட்டத்தில் தமிழ்நாட்டில் இருக்கின்ற சுமார் 1 கோடிக்கும் அதிகமான பெண்கள் பயனடையப் போகிறார்கள்! ஒரு கோடி பெண்கள் என்றால், ஒரு கோடி குடும்பங்கள்! இன்னும் பல தலைமுறைகள் என்று எடுத்துக்கொள்ள வேண்டும்!

ஏழை, எளிய பெண்களுக்கு யாரையும் எதிர்பார்க்கத் தேவை இல்லாத பொருளாதார விடுதலையையும் இந்தத் திட்டம் நிச்சயமாக அளிக்கப் போகின்றது. இப்படி, அனைவருக்கும் அனைத்தும் கிடைக்கும் உன்னதமான நோக்கத்துடன் செயல்பட்டுவரும் இந்த அரசுக்கு அனைவரும் வழக்கம் போல் நல்ல ஒத்துழைப்பை வழங்குங்கள்.

உங்களை எல்லாம் பார்க்கின்ற நேரத்தில் ஏதோ பணிகளை எல்லாம் நிறைவு செய்துவிட்டோம், முடித்துவிட்டோம் என்று சொல்லவில்லை, இன்னும் செய்யவேண்டும், இன்னும் செய்யப் போகிறோம், இன்னும் செய்வதற்கான அந்த ஆக்கமும், உற்சாகத்தையும் நீங்கள் வழங்கிக் கொண்டிருக்கிறீர்கள், தொடர்ந்து அந்த உற்சாகத்தையும், ஊக்கத்தையும் வழங்குங்கள், வழங்குங்கள் என்று கேட்டு உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்வாய்ப்பைப் பெற்றமைக்கு மீண்டும் ஒரு முறை என்னுடைய மகிழ்ச்சியை, நன்றியை, வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### பாரத், சனாதனம் என திசை திருப்பும் பா.ஜ.க.வின் தந்திரங்களை எதிர்த்து - தமிழ்நாட்டிற்காக

## தன்னை முழுமையாக அர்ப்பணித்து முதல்வர்களில் முதல்வனாக ஜொலிக்கிறார் மு.க.ஸ்டாலின்!

### 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

*சென்னை, செப். 14 -*

*'தினகரன்' நாளேடு 13.9.2023 தேதிய இதழில் வெளியிட்டுள்ள தலையங்கம் வருமாறு:-*

*கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றிக்காட்டுவதில் நாடு முழுவதும் உள்ள முதல்வர்களில் முதல்வனாக திகழ்ந்து கொண்டு இருக்கிறார் நமது முதல்வர் மு.க.ஸ்டாலின். அவரது ஆட்சியின் அடுத்த சிக்சர் 1.06 கோடி பெண்களுக்கு தேர்தல் வாக்குறுதியில் உறுதி அளித்தபடி மாதம் ரூ.31000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டம் நாளை மறுநாள் காஞ்சிபுரம் நகரில் தொடங்கி வைக்கப் பட உள்ளது. ஒவ்வொரு நொடியும் தான் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றத் துடிக்கும் தன்னிகரில்லா தலைவனாக தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் திகழ்கிறார்.*

*ரூ.440ஆக இருந்த சமையல் காஸ் விலையை இந்த 9 ஆண்டுகளில் ரூ.1118.50 ஆக உயர்த்தி விட்டு, 5 மாநில தேர்தலும், அதைத்தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தலும் நெருங்கி வருவதை கண்டு பயந்து 200 மட்டும் குறைத்து விட்டு, பெண்களின் வேதனையை கண்டு விலையை குறைத்து சாதனை படைத்துவிட்டதாக பெருமைபட்டுக்கொள்ளும் தலைவர் அல்ல அவர். 2021ம் ஆண்டு மே மாதம் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த அடுத்த கணமே மகளிருக்கு கட்டணமில்லா விடியல் பயணத்தை அமைத்துக்கொடுத்த பெண்களின் மனம் கவர்ந்தவர் அவர்.*

*ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை வழங் குவதாக சொல்லி, ஆட்சியின் கடைசி காலத்தில் ஒரு வருடத்தில் 10 லட்சம் பேருக்கு வேலை வழங்குவதாக கூறி விட்டு, அதிலும் இப்போது வரை 5.5 லட்சம் பேருக்கு,*



தினகரன்

செப்டம்பர் 13, 2023 புதன்கிழமை

முதல்வர்களில் முதல்வன்

கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றிக்காட்டுவதில் நாடு முழுவதும் உள்ள முதல்வர்களில் முதல்வனாக திகழ்ந்து கொண்டு இருக்கிறார் நமது முதல்வர் மு.க.ஸ்டாலின். அவரது ஆட்சியின் அடுத்த சிக்சர் 1.06 கோடி பெண்களுக்கு தேர்தல் வாக்குறுதியில் உறுதி அளித்தபடி மாதம் ₹1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டம் நாளை மறுநாள் காஞ்சிபுரம் நகரில் தொடங்கி வைக்கப்பட உள்ளது. ஒவ்வொரு நொடியும் தான் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றத்துடிக்கும் தன்னிகரில்லா தலைவனாக தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் திகழ்கிறார்.

*எப்படி வேலை வழங்கப்பட்டது, எப்போது அறிவிப்பு வெளியிடப்பட்டது, எத்தனை பேர் விண்ணப்பித்தார்கள், எங்கு தேர்வு நடந்தது, எப்படி தேர்வு செய்யப்பட்டார்கள் என்ற எந்தவித விவரமும் இல்லாமல் வேலைக்கான ஆணையை வழங்கி, மாய மந்திர ஆட்சி நடத்தவில்லை மு.க.ஸ்டா லின், நாள் முதல்வன் திட்டம் அறிவித்து இளைஞர்களின் வேலைக்கனவை நிறைவேற்ற உதவும் மக்கள் முதல்வர் அவர்.*

*சுவிஸ் வங்கிப் பணத்தை எல்லாம் மீட்டு ஒவ் வொரு இந்தியர்களின் வங்கிக் கணக்கில் ரூ.15 லட்சம் போடப்படும் என்று ஏமாற்றவில்லை அவர். முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை அறிவித்து பசித்து வாடி பள்ளிக்கு வரும் மாணவச்செல்வங்களின் மனங்களை குளிரச் செய்தார் மு.க.ஸ்டாலின். தேசத்திற்காக பதக்கங்களை வென்று குவித்த மல்யுத்த வீராங்கனைகள் டெல் லியில் பலநாட்கள் போராடியும் அவர்கள் குரலை கேட்க மறுத்தது போல், தமிழ்நாட்டில் ஒருபோதும் இருமாப்பு கொண்டு ஆட்சி நடத்தவில்லை முதல்வர் மு.க. ஸ்டாலின். புதுமைப் பெண் திட்டம் அறிவித்து படிக்கும் 2.50 லட்சத்திற்கு மேற்பட்ட மாணவிகள் கல்லூரி படிப்பை மேற்கொள்ள வசதியாக மாதம் ரூ.1000 அவர்களின் வங்கிக் கணக்கிலே இடம் பெற வைத்து அவர்களின் கஷ்டங்களை புரிந்த செயல் நாயகன் அவர்.*

*இந்த 9 ஆண்டுகளில் கிட்டத்தட்ட ரூ.713 லட்சம் கோடி மக்கள் வரிப்பணத்தை பெரு முதலாளிகளுக்காக தள்ளுபடி, அவர்கள் பாணியில் ரைட் ஆப் செய்யவில்லை. கடந்த மே 3ம் தேதியில் இருந்து மணிப்பூர் மாநிலத்தில் மக்கள் கொத்து கொத்தாக கொல்லப்பட்டுக் கொண்டு இருப்பதை கண்டும், காணாமல் இருந்து கொண்டு விருந்து, கேளிக்கை, உலக நாடுகளுக்கு சுற்றுப் பயணம் செய்யவில்லை. எப்போதெல்லாம் பிரச்சினை வருகிறதோ அப்போதெல்லாம் இந்தியா, பாரத், சனாதனம் என்று ஏதாவது திசை திருப்பும் தந்தி ரங்களை உபயோகப்படுத்தவில்லை. முழுமையாக தமிழ் நாட்டிற்காக தன்னை அர்ப்பணித்து செயல்படும் முதல்வர்தான் மு.க. ஸ்டாலின். அதனால் தான் முதல்வர்களின் முதல்வனாக ஜொலிக்கிறார் அவர்.*


*இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மயிலை ந.பூ.இராமஜெயம்

**செப்டம்பர் 14 (2007)**



இளமைக்காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

வட்ட மற்றும் பகுதி அவைத் தலைவராகவும் பின்னர், பகுதிக் கழகச் செயலாளராகவும், தென்சென்னை மாவட்ட அவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

1996ஆம் ஆண்டு மயிலை தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இந்து நாளிதழ் தொழிற்சங்கத்தில் தொடர்ந்து 35 ஆண்டுகள் பொதுச்செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.

"நான் மதிக்கின்ற, போற்றுகின்ற, புகழ்கின்ற, பாராட்டுகின்ற, என்நெஞ்சில் வைத்து நினைத்து மகிழ்கின்ற ஒரு தொண்டன் ராமஜெயம்" என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**